**ரிதீகம பிரதேச சபை**

**குருநாகல் மாவட்டம்**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ரிதீகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 65,644,929 பெறுமதியான 07 வாகனங்கள் சபைக்கு கையேற்கப்படாமல் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டில் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டின் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 50,314,060 ஆக இருந்ததுடன், 2016 மார்ச் கூற்றுக்கள் கணக்காய்வு திகதி வரையில் அதில் ரூபா 18,640,170

தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மேலும் நிலுவையாக இருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 31,673,890 ஆக இருந்தன.

(ii) ஊழியர் கடன் பட்டோலையின் பிரகாரம் ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 130,079 தொகையும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 12,835 தொகையும் மரணித்த ஒருவரிடமிருந்து ரூபா 4,000 உமாக ரூபா 146,914 தொகையான கடன் மற்றும் முற்பணங்கள் 03 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடப்படாது காணப்பட்டன.

(iii) மீளாய்வாண்டின் இறுதியிலான ரூபா 31,210,196 தொகையான வருமானக் கடன்பட்டோர் மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளின் பெறுமதி ரூபா 1,878,708 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 31,800,709 ஆக இருந்ததுடன், 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படும் மீதிகளின் பெறுமதி ரூபா 4,096,728 ஆக இருந்தது.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

ஆதனவரி கொடுப்பனவுகளை தவிர்ப்புச் செய்பவர்களுக்கு அனுப்ப வேண்டிய 41 இறுதி அறிவித்தல்களுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ)(ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி செயலாற்றுகை**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,929,817 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,564,006 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,365,811 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவுகளுக்கு ரூபா 101,499,775 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 106,913,333 இற்கான மூலதனச் செலவுகளை சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 3,516,259 இற்கான மிகையொன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருமானம் | | | | செலவினம் | | |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 9,004 | 6,707 | 2,297 | தனிப்பட்ட வேதனம் | 42,660 | 32,159 | 10,501 |
| (ii) | ஏனையவை | 53,132 | 53,084 | 48 | ஏனையவை | 10,547 | 21,068 | (10,521) |
| | உப மொத்தம் | 62,136 | 59,791 | 2,345 | உப மொத்தம் | 53,207 | 53,227 | (20) |
| (iii) | மூலதன வருமானம் | 101,500 | 57,510 | 43,990 | மூலதன செலவினம் | 106,913 | 64,683 | 42,230 |
| | மொத்தம் | 163,636 | 117,301 | 46,335 | மொத்தம் | 160,120 | 117,910 | 42,210 |
| | செயற்பாட்டு விளைவு | 8,930 | 6,564 | 2,366 | மிகை/ பற்றாக்குறை | 3,516 | (609) | 2,907 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 62,136,252 தொகையில் 85 சதவீதமான ரூபா 53,132,414 தொகை சபையினால் உருவாக்கப்படாத வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. அவ்வாறே மூலதன வருமானமாகிய ரூபா 101,499,775 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது.

ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 53,206,435 தொகையில் அண்ணளவாக 80 சதவீதம் ரூபா 42,659,857 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் அண்ணளவாக 97 சதவீதம் ரூபா 41,210,231 ஆன சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டு ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவினமான ரூபா 106,913,333 தொகையில் அண்ணளவாக 07 சதவீதம் ரூபா 7,615,284

தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 93 சதவீதமான ரூபா 99,298,049 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

**மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 ஆண்டு | | | 2014 ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 2,692 | 1,809 | 2,798 | 2,532 | 1,659 | 2,976 |
| (ii) குத்தகை வாடகை | 4,384 | 3,544 | 456 | 3,178 | 2,489 | 361 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,023 | 1,045 | 367 | 1,069 | 650 | 523 |
| (iv) ஏனைய வருமானம் | 59,232 | 37,393 | 27,067 | 52,533 | 5,339 | 56,927* |
| மொத்தம் | 67,331 | 43,791 | 30,688 | 59,312 | 10,137 | 60,787 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | வருமான சேகரிப்பு | | | நிலுவை மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 2,989 | 2,557 | 5,546 | 939 | 1,809 | 2,748 | 2,050 | 748 | 2,798 |
| வாடகை | 362 | 3,665 | 4,027 | 27 | 3,544 | 3,571 | 335 | 121 | 456 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 523 | 1,045 | 1,568 | 156 | 1,045 | 1,201 | 367 | - | 367 |
| *ஏனைய வருமானம் | 31,038 | 56,605 | 87,643 | 21,447 | 39,129 | 60,576 | 9,592 | 17,475 | 27,067 |
| | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- |
| மொத்தம் | 34,912 | 63,872 | 98,784 | 22,569 | 45,527 | 68,096 | 12,344 | 18,344 | 30,688 |
| | ====== | ====== | ====== | ===== | ====== | ===== | ===== | ===== | ====== |

* 2015 சனவரி 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஏனைய வருமான நிலுவை மீதி ரூபா 56,927 ஆக இருந்த போதிலும், சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 31,038 ஆக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

-------------------------------

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

-----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 2,989,535 தொகையான நிலுவை வீதவரி மற்றும் வரிகளிலிருந்து 31 சதவீதமான அல்லது 938,963 தொகை மாத்திரம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் 69 அல்லது ரூபா 2,049,572 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 2,557,029 ஆக இருந்ததுடன் அதில் 71 சதவீதம் அதாவது ரூபா 1,809,388 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் 29 சதவீதம் அல்லது ரூபா 747,641 நிலுவை காணப்பட்டது.

### 2.3.4 வாடகை

--------------

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் ரூபா 361,684 தொகையான நிலுவையிலிருந்து 7 சதவீதமான அதாவது ரூபா 27,217 தொகை மாத்திரம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் 93 அல்லது ரூபா 334,467 தொகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

-------------------------------------------------------

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 523,364 தொகையான நிலுவையிலிருந்து 29 சதவீதமான அதாவது ரூபா 155,600 மாத்திரம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்ததுடன் 71 சதவீதமான ரூபா 367,764

தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் நிலுவை மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையான ஏனைய வருமானம் ரூபா 24,793,448 ஆக காணப்பட்டதுடன், அதில் 38 சதவீதமான அதாவது ரூபா 9,515,895 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட ஏனைய வருமானம் ரூபா 10,264,997 ஆக இருந்ததுடன் அதில் 2 சதவீதம் அல்லது ரூபா 264,997 தொகை மாத்திரம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்தது. 98 சதவீதம் அதாவது ரூபா 10,000,000 மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக காணப்பட்டது.

### 2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 10,165,176 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 2,165,176 மீளாய்வாண்டு இறுதியில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 2.3.8 ஏக்கர் வரி

ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை ஏக்கர் வரி அளவு ரூபா 230,029 ஆக இருந்ததுடன், ஆண்டில் அதில் 8 சதவீதமான அதாவது ரூபா 19,724 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 210,305 தொகை கணக்காய்வு திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் பதவியணியில் 10 பதவிகளுக்குரிய 15 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை மூலம் அரச சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் ஊழியர்களின் சம்பளத்திற்காக

உள்ளூராட்சி ஆணையாளரால் மீள் நிரப்பப்பட வேண்டிய ரூபா 2,268,401 தொகை கிடைக்கப் பெறாதிருந்தமையால் அச்சம்பளம் சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்துடன் அது சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பாதகமாக தாக்கமளித்திருந்துத.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக சட்டத்தரணிகள் கட்டணமாக ரூபா 287,100 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மண் பெற்றுக்கொள்வதற்காக சபைக்குச் சொந்தமாக காணி இருக்கையில் அவற்றிலிருந்து மண் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டில் ரீதிகம மயானத்தை நிரப்புவதற்காக ரூபா 310,500 செலவிடப்பட்டிருந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.1.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

2015 பெப்ரவரி 05 ஆந் திகதிய பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிடமிருந்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,066,200 பெறுமதியான இயந்திரம் மீளாய்வாண்டில் விளைவற்றதாக காணப்பட்டதுடன் அந்த இயந்திரத்தை பயன்படுத்தாமல் சபையின் செயற்பாடுகளுக்காக வெளிநிறுவனங்களிலிருந்து இயந்திரம் வாடகைக்கு எடுக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்